Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

இலவசப் பிரதி

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 14

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி-19 | 01-06-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -104

S.M கோல்ட் ஹவுஸ்



காலத்தால் அழியாத கண்கவர் தங்க நகைகளை சுத்தமான 22 கரட் தங்கத்தில் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

T.P: 024-222 4267

# ஊடகவியலாளர் ஜி.நடேசன் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

## காலையில் அலுவலகம் செல்கையில் நடந்த துயரம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தின் மூத்த பத்திரிகையாளரும், 2000 ஆம் ஆண்டில் சிறந்த பத்திரிகையாளராகத் தெரிவுசெய்யப்பட்ட வருமான ஜி.நடேசன் நேற்றுக்காலை 9.10 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.**



நேற்றுக்காலை 8.45 மணியளவில் அவர் தனது வீட்டிலிருந்து கடமைக்காகப் புறப்பட்டுச் சென்றவேளை 9.10 மணியளவில் மாமாங்கம் எல்லை வீதியில் உள்ள காரியாலயத்தை நெருங்கும் வேளையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு வாரப்பத்திரிகை ஒன்றிற்கு "மீண்டும் கலங்கிய குட்டையாகும் மீன் பாடும் தேனாடாம் மட்டக்களப்பு" என்னும் தலைப்பொன்றில் கட்டுரை எழுதியிருந்த அவர் மட்டக்களப்பில் அண்மையில் அதிகரித்து வரும் வன்முறைகள், படுகொலைகள் தொடர்பாகவும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இக் கட்டுரையில் சிறிலங்கா இராணுவத்தையும், புதிதாக கிழக்கிற்கு நியமனம் பெற்றுள்ள மேஜர் ஜெனரல் சாந்தகொட்டகொட குறித்தும் விமர்சனம் செய்ததோடு சுட்டுக்கொல்லப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகப் பொருளியற்துறைத் தலைவர் தம்பையா

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுப் பற்றாளராக நடேசனுக்கு கௌரவம்

அமரர் ஜி.நடேசன் அவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டுப்பற்றாளர் எனும் நிலையை வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியல்துறையினர் விடுத்துள்ள அறிக்கையில், யுத்த சமாதான காலங்களில் இன்னல்களை அனுபவித்த தமிழ்மக்களின் வாழ்வியல் துன்பங்களை விடுதலையுடன் கூடிய இயல்பு வாழ்க்கைக்கான மக்கள் கொண்ட ஏக்கங்களை உள்நாட்டிலும், உலகநாடுகளிலும் வெளிக்கொண்டு தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் பணியாற்றிய அமரர் ஜி.நடேசன் அவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் "நாட்டுப்பற்றாளர்" என்னும் நிலையை வழங்கிக் கௌரவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடேசனின் பூதவுடல் இன்று நெல்லியடிக்கு எடுத்துவரப்படும்

மட்டக்களப்பில் நேற்று சுட்டுக் கொல்லப்பட்ட மட்டக்களப்புச் செய்தியாளர் ஜி.நடேசன் அவர்களின் பூதவுடல் இன்று அவரது சொந்த இடமான யாழ்ப்பாணம் நெல்லியடிப் பகுதிக்கு எடுத்துவரப்படவுள்ளது.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த இவரின் பூதவுடல் இன்று காலை 10மணிக்கு மட்டக்களப்பிலிருந்து அவரின் சொந்த இடமான நெல்லியடிக்கு எடுத்துவரப்பட இருக்கிறது.(லோ)

## நாட்டுப்பற்றாளர் நடேசனின் படுகொலைக்கு விடுதலைப்புலிகள் கடும் கண்டனம்

தமிழ்த் தேசியப் பற்றாளரும் மூத்த ஊடகவியலாளருமான ஜி.நடேசன் அவர்கள் கண்மூடித் தனமாகப் படுகொலை செய்யப்பட்டதை தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழ்த்தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் உரிய உழைப்புக்களை மேற்கொண்டு அயராது பாடுபட்டவர். தனது எழுத்துத் துறையால் தமிழ்த் தேசியத்தின் கூர்மைப்படுத்தலுக்கு ஓயாது அறைகூவல் விடுத்தவர் அற்புதமான கருத்துக்களை முன் வைத்தவர் தமிழ்த்தேசியத்திற்கு மாறான நடவடிக்கைகளையும், கருத்துக்களையும் வன்மையாக மறுதலித்தவர். தமிழினத்தின் விடுதலைக்கான விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை எழுத்துத்துறையால் வலியுறுத்தியவர்.

இனத்தின் விடுதலைக்கான நியாயங்களை வலுப்படுத்தும் ஆணித்தரமான கருத்துக்களையும் தமிழினத்தின் போராட்டத்திற்கு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி-சாந்த கொட்டேகொட நடேசன் கொலை குறித்துப் பேச்சு

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் ஜி.நடேசன் கொலை தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மட்டக்களப்பு மாவட்ட கூட்டு நடவடிக்கைத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அத்துடன் புதிய இராணுவத்தளபதியாக அவரை நியமிப்பது தொடர்பாகவும் அவர் பேசியதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில் புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேக்கொட நியமிக்கப்படலாம் என

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பல்வேறு ஊடக அமைப்புக்கள் நடேசனின் கொலைக்கு கண்டனம்

(மட்டக்களப்பு)

தமிழ் ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலைக்கு பல்வேறு ஊடக அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம், சுதந்திர ஊடகவியலாளர் சங்கம் யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் அவர்கள் சார்ந்த அமைப்புக்கள் உட்பட பல அமைப்புக்கள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளன.

இதனை விட யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவின் மட்டக்களப்பு வதிவிடப் பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் பிரதிநிதி திக்கரும் நேரடியாக இவரின் இல்லத்திற்குச் சென்று நிலைமைகளை பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு இப் படுகொலை தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

## இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதன் மூலமே தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும்

### – மேல்மாகாண ம.மு.தலைவர் மனோகணேசன்



இடைக்கால நிர்வாக சபை ஒன்றை வடக்குக் கிழக்குப் பிரதேசத்துக்கு வழங்குவதன் மூலமே இங்கு வாழும் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும் என மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

நேற்று அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்த பின்னர் அவர் செய்தியாளரிடம் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் எமது மேல்மாகாண மக்கள் முன்னணி எந்தவொரு பெரும்பான்மை கட்சியுடனும் இணைந்து கொள்ளாமல் தனித்துவமாக எமது சின்னத்திலே போட்டியிடுகின்றோம். அது மாத்திரமல்ல குறிப்பாக கொழும்பு கம்பகா மாவட்டங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களை அவர்கள் வடக்கு கிழக்கிலிருந்து வந்தவர்களா

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புளத்சிங்களவில் சிங்களவர் - தமிழர் மோதல் காயமடைந்த தமிழர்மீது மருத்துவமனையில் தாக்குதல்

### - 20 தமிழர்கள் காயம்;பத்துவீடுகள் சேதம்

களுத்துறை புளத்சிங்களப் பகுதியிலுள்ள மில்கந்த தோட்டத்தில் சிங்களவருக்கும், தமிழர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 20பேர் காயமடைந்து புளத் சிங்கள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவர் கடுங் காயமடைந்தவர்களில் புளத்சிங்கள பிரதேசசபை தமிழ் உறுப்பினரான பொன். இராமலிங்கமும் ஒருவர்.

இதேவேளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழர்களை அங்கு அத்துமீறிப் பிரவேசித்த சிங்களவர்கள் தாக்கியதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து தமக்குப் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து வைத்தியசாலை ஊழியர்கள் வெளியேறிவிட்டதாக மேலும் தெரிய வருகின்றது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து சனாதிபதி பகிரங்கப்படுத்த வேண்டும்

### -நேற்றைய சந்திப்பில் ஜே.வி.பி.வலியுறுத்து

(கொழும்பு)

தமது சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டுமென ஜே.வி.பி.வலியுறுத்தியுள்ளது.

நேற்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா, சோமவன்ச அமரசிங்க போன்றோர் சனாதிபதி சந்திரிகாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இதனை வலியுறுத்தியுள்ளார்.

சமாதானம் தொடர்பாக மக்கள் மத்தியில் இருக்கின்ற விளக்கமின்மையை சனாதிபதி மக்களுக்குப் போக்கவேண்டும். அதாவது ரணில் எவ்வாறான சமாதானத்தை முன்னெடுத்துச் சென்றாரோ அதேபோன்றதான் சனாதிபதி இன்று சமாதானத்தை முன்னெடுத்துச் செல்கிறார். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சுடுதலான அதி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## -காஸாவிலிருந்தான படைவிலகல் குறித்து-

# இஸ்.அமைச்சரவையில் நடந்த விவாதம் தீர்மானம் எதுவுமின்றி ஒத்திவைப்பு

(டெல்அவிவ்)

**காஸா முனையிலிருந்து இஸ்ரேலிய இராணுவத்தை வாபஸ் பெறுவது தொடர்பாக பிரதமர் ஏரியல் ஷரோனின் பிரேரணையை ஏழுமணி நேரம் ஆராய்ந்த இஸ்ரேலிய அமைச்சரவை எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளாத நிலையில் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வரை ஒத்திவைத்துள்ளது.**

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனின் காஸா முனையில் உள்ள படையினர் மற்றும் யூதக்குடியேற்ற வாசிகளை வெளியேற்றுவது தொடர்பான பிரேரணைக்கு இஸ்ரேலிய ஆளும் கட்சியினருக்கிடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப்பிரேரணை தொடர்பான விவாதத்தின் போது பதினொரு அமைச்சர்கள் ஆதரவு தெரிவித்ததாகவும் பன்னிரெண்டு அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர் எனவும் இஸ்ரேலியப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

காஸா முனையில் உள்ள 21 யூதக்குடியேற்றத் திட்டங்களில் இருந்தும் மேற்குக்கரை ஓரங்களில் உள்ள 120 குடியேற்றத் திட்டங்களில் நான்கில் இருந்தும் யூதர்களை வாபஸ் பெறுவது ஏரியல் ஷரோனின் நோக்கமாகும்.

ஏரியல் ஷரோனின் இந்தப் பிரேரணைக்கு நிதி அமைச்சரும், முன்னாள் பிரதமருமான பெஞ்சமின் நெத்தன்யாகு தீவிர எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக்குள் கருத்து வேறுபாடுகளை நீக்கும் வகையில் நீதி அமைச்சர் ஜோசெப்லத்தியு தெரிவித்த இணக்கப்பிரேரணையில் காஸா முனையில் மூன்று குடியேற்றத் திட்டங்களில் இருந்தே வாபஸ் பெறப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏரியல் ஷரோன் கருத்துவெளியிடுகையில் 13 இலட்சம் பலஸ்தீனர்களுக்கு மத்தியில் ஏழாயிரத்து ஐந்நூறு இஸ்ரேலியர்கள் 21 குடியேற்றத் திட்டங்களில் வாழ்ந்து வருவது இயலாத விடயம் எனக் கூறி உள்ளார்.

இந்நிலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலிய அமைச்சரவையில் ஏரியல் ஷரோனின் பிரேரணை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## திகதியை அறிவிக்க முடியாது

(பாக்தாத்)

ஈராக்கிலிருந்து அமெரிக்கா வெளியேறும் திகதி தற்போதைக்கு அறிவிக்க முடியாது என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான நிர்ப்பந்தங்களையும் அமெரிக்கா ஏற்றுக்கொள்ளாது என்றும் அது தெரிவித்துள்ளது.



ஆயுதப்பலத்தை அதிகரிக்கும் சீனா கடற்படையின் நவீன மயப்படுத்தப்பட்ட பீரங்கி

# சவுதியில் தீவிரவாதிகளின் தாக்குதல்களால் வெளிநாட்டுப்பணியாளர்கள் அச்சம்

(ரியாத்)

சவுதி அரேபியாவின் எண்ணெய் குதங்கள் மீது தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதலை நடத்துவது அங்கு பணியாற்றும் ஊழியர்களைச் சிறைபிடிப்பது போன்ற நடவடிக்கைகளால் அங்குள்ள இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு பணியாளர்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

சவுதி அரேபியாவிலுள்ள கோபா என்னும் எண்ணை நிறுவனமொன்றின் மீது பலரை தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்களினால் 8 இந்தியர்கள் உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர். மேலும் இந்தியர்கள் உட்பட பலரை தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர்.

பலமணி நேரப்போராட்டத்தின் பின் நேற்று முன்தினம் பணக் கைதிகள் அனைவரும் மீட்கப்பட்டனர். தீவிரவாதக் குழுவின் தலைவர் நிமல் அல் பத்னி உட்பட இரண்டு பேர் காயங்களுடன் பிடிபட்டனர். இத்தாக்குதலுக்கு அல்-ஹைறதா தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

சவுதிஅரேபியாவில் உள்ள எண்ணை நிறுவனங்களில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்தத் தொடர் தாக்குதல் இந்தியர்களிடையே பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே இந்தியாவைச் சேர்ந்த வெங்கட்ரமணி என்பவர் சுமார் 26 மணி நேரம் கழிவறையில் பதுங்கியிருந்ததால் உயிர்தப்பியுள்ளார்.

தன்னை அந்நிறுவனத்தில் பணியாற்றிய வரவேற்பாளர் தொலைபேசிமூலம் தகவல் கொடுத்ததால் தான் தம்மால் தப்பமுடிந்தது என்று அவர் கூறியுள்ளார்.



சவுதி அரேபியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பணயக்கைதிகள் மீட்பு நடவடிக்கையில் பங்கு பற்றிய உலங்கு வானூர்தி.

# அமெ.படையினர் மீது ஈராக்கில் தாக்குதல்

## -இரு படையினர் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாக்கில் நேற்று நடைபெற்ற தாக்குதலில் இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முக்ததா அல்சதரின் ஆதரவுக் குழுவினரே அமெரிக்கப் படையினர் மீது தாக்குதலை நடத்தியதாகவும் அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை சியா முஸ்லிம்கள் பெருமளவு வசிக்கும் குபா நகரிற்கருகே குபா என்ற இடத்தைச் சுற்றிவர உள்ள பகுதிகளில் தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கப்படையினருக்குமிடையே நேற்று முன்தினம் முதல் தொடர்ந்து மோதல் இடம்பெற்றுவருவதாகவும் இதுவரை 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

# புதிய அதிபரைத் திணிக்க அமெரிக்கா முற்படுகிறது

## -ஈராக் ஆட்சிக்குழு குற்றச்சாட்டு

(லண்டன்)

ஈராக்கில் அமெரிக்கா தமது விருப்பத்திற்கு மாறாக புதிய அதிபர் ஒருவரைத் திணிக்க முயல்வதாக அமெரிக்காவால் நியமிக்கப்பட்ட ஆட்சிக்குழுவினர் குற்றம் சாட்டியுள்ளனர். ஆட்சிக்குழுவின் தற்போதைய தலைவர் டாகிஅல் ஜாவர் அவர்களுக்கு ஆதரவாக பெரும்பாலான உறுப்பினர் இருக்கின்றனர். ஆனால் ஈராக்கின் பாதுகாப்பு நிலைமைகளை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் கையாளும் விதம் குறித்து அவர் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

## கராச்சியில் குண்டுவெடிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவமொன்றில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சியா முஸ்லிம்களின் பகுதி ஒன்றிற்கருகே இந்தக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இதில் பலர் காயமடைந்துள்ளனர்.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு சீனாவின் தியனமன் சதுக்கத்தில் நடைபெற்ற படுகொலையைக் கண்டிக்கும் ஆர்ப்பாட்டம்







ஈராக்கில் வாகனத்தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டு இருவர் கொல்லப்பட்டதோடு இருவாகனங்களைத்தீயிட்டுக்கொழுத்தப்பட்டுள்ளன.

# சவுதியிலிருந்து அமெரிக்கர் உடன் வெளியேறுக

## -சவுதியிலுள்ள அமெ.தூதரகம் கோரிக்கை

(ரியாத்)

சவுதி அரேபியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பணயக்கைதிகள் சம்பவத்தை அடுத்து அரேபியாவில் வாழும் அமெரிக்கர்கள் அனைவரையும் உடனடியாக நாடுதிரும்புமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை அமெரிக்கர்கள் உட்பட மேற்கத்தேய நாட்டினர் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தப்போவதாக அல்கைதா தீவிரவாத அமைப்பு அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

இதனை அடுத்து சவுதியின் ரியாத் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

# சூழல் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு யூன்–சூழல் மாதமாகப் பிரகடனம்

-பல்வேறு செயல் திட்டங்களுக்கும் ஏற்பாடு

(கிளிநொச்சி)

**சூழல் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு யூன்-5 உலக சூழல் தினத்தை முன்னிட்டு யூன் மாதத்தை சூழல் மாதமாகப் பிரகடனப்படுத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு செயற்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்க ஆராயப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற சூழல் பாதுகாப்பிற்கான முன்னோடிக் கருத்தரங்கில் இது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் யூன் முதலாம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையான காலத்தை சூழல் பாதுகாப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தும் நோக்கில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் பொ.நித்தியானந்தன், பிரதேசசபை செயலாளர் திருமதி அன்னலிங்கம் மற்றும் வர்த்தக சங்கத்தினர் த.பொ.மே. நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதியினர் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இம் மாதத்தில் சூழல் பாதுகாப்பு, பொலித்தீன் அழிப்பு, பிளாஸ்ரிக் பொருட்கள் அழிப்பு, பதாதைகள் கட்டுதல், கழிவு அகற்றல் நடவடிக்கைகள், பரப்புரைகளை வழங்குதல், மரங்களை நாட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தீர்மானிக்கப்பட்டது. மேலும் இச்செயல் திட்டங்களை கிராம மட்டத்தில் சிறப்பாக நடைமுறைப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மூவர் கைது

மன்னார்பள்ளிமுனைக்கிராமத்தில் போதைப்பொருள் விற்பனை செய்த வயோதிபப்பெண்ணும் அவரிடம் போதைப் பொருளை வாங்கிய இரு இளைஞர்களும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை மன்னார் நீதவான் எம்.எம். அப்துல்லா நாளைவரை விளக்கமறியலில் வைக்கப் பணித்துள்ளார். (மி)

## கனகராஜன்குளப்பகுதியில் விவசாயிகளுக்கு பயிற்சி

த.பொ.மே.நிறுவன வவுனியா மாவட்ட கனகராஜன்குளச் செயலகத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை நெடுங்கேணி பிரதேச செயலர் உதவி விவசாயப் பணிப்பாளர், கமநல உதவி ஆணையாளர் ஆகியோர் ஏற்றிவைக்க த.பொ.மே நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த வே.பூங்குன்றன் தேசியக்கொடி ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து த.பொ.மே.நிறுவன மாவட்ட விவசாயப்பகுதி இணைப்பாளர் ம.சோதி தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வில் கருத்துரைகளை உதவி விவசாயப்பணிப்பாளர், கமநலசேவை உதவி ஆணையாளர், பிரதேச செயலர் ஆகியோர் வழங்கினர். மேற்படி பயிற்சி வகுப்பு மூன்று மாதங்களுக்கு நடைபெறும் என்றும், விவசாயிகளுக்கான வாழ்வாதார உதவித்திட்டத்தை போரூட் நிறுவன இணைப்பாளர் அறிமுகம் செய்து வைத்ததைத் தொடர்ந்து கலந்து கொண்ட சில விவசாயிகளுக்கு உபகரணங்களும், விதைதானியங்களும் வழங்கப்பட்டன. மேலும் நடைபெறும் பயிற்சி வகுப்பில் ஏனைய விவசாயிகளும் பங்குபற்றிப் பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வைத்தியசாலையில் கவனம் செலுத்துக!

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் ஒருபக்க வேலி (தகரவேலி) விழுந்து நீண்ட நாட்களாகக் கவனிப்பாரற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் அந்தப்பக்கமாகவுள்ள வைத்தியசாலையின் வளவு துப்பரவின்றி செடிகள் முளைத்து காடுபோலவும் உள்ளது இது சுகாதாரத்துக்கு சீர்கேடாக வுள்ளது. (08)

## ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் தாமதத்தால் எதிர்காலத் திட்டங்கள் பாதிப்பு

### முல்லை.பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர்

முல்லை மாவட்டத்தில் 10 சுகாதார நிலையங்கள் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் இதுவரை 1ஆரம்ப சுகாதார நிலையங்களே முழுமையடைந்துள்ளன.

அளம்பில் ஆரம்ப சுகாதார நிலையமும், அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையமும், விசுவமடு, முத்துஐயன்கட்டு, கரிப்பட்டமுறிப்பு, சுதந்திரபுரம், கைவேலி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மே மாதம் கட்டப்படுவதாக வாக்களிக்கப்பட்டும் இன்றுவரை முடிவுறுத்தவில்லையென பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் துவிஜேயகுலராஜா கவலை தெரிவித்தார்.

2003ஆம் ஆண்டுக்குள் இந்த 10ஆரம்ப சுகாதார நிலையங்களும் அமைத்து முடிக்காததினால் 2004 ஆம் ஆண்டுக்கு 10ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கான நிதி தருவதாகக் கூறியும் போனவருட வேலைகள் முடிக்காததினால் இவ்வருடத்தில் 5ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வேலைகளைப் பொறுப்பெடுத்துச் செய்பவர்கள் மிகவும் கவனமெடுத்து அந்தந்தக் காலப்பகுதியில் வேலைகளை முடித்துத் தர வேண்டும் என்றும் முடித்துத் தந்தால் ஏனைய எமது ஆரம்ப சுகாதார நிலைய சேவையை விரிவாக்கம் செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். (20)



கிளிநொச்சி நகரப்பகுதியிலிருந்து இரணைமடு நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தை அண்மித்த பகுதி புனரமைக்கப்படுவதை படத்தில் காண்க. (படம் வரன்)

## இந்தியாவில் சிறுபான்மை இனத்தவர் தலைமையேற்பு இலங்கையில் கனவிலும் எதிர்பார்க்க முடியுமா?

### மனித உரிமைவாதி கா. சிவபாலன்

(திருமலை)

82 சத வீத இந்துக்கள் வாழும் இந்தியாவில் ஒரு சதவீதமான சீக்கிய இனத்தைச்சேர்ந்தவர் பிரதம மந்திரியாகவும் இரு சதவீதத்தினரான முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாகவும் பதவி வகிக்கின்றனர். இவ்வாறான ஒரு நிலையை கனவிலும் நாம் இலங்கையில் எதிர்பார்க்க முடியுமா? இவ்வாறு மனித உரிமைவாதியும் சட்டத்தரணியுமான கா. சிவபாலன் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் திருகோணமலை மாவட்ட வலையமைப்பால் சிறுபான்மையினரின் உரிமைகளும் நல்லாட்சியும் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட இரு நாள் பயிற்சிப்பட்டறையில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கையின் முதலாவது அரசமைப்பில் இடம்பெற்ற 29 ஆவதுஷரத்து சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதாக அமைந்தது சிறுபான்மையினரின் நலன்கள் மற்றும் மதமொழி உரிமைகளைப் பாதிக்கக்கூடிய சட்டங்களை இயற்றுவதைத் தடுக்கக்கூடிய வலிமையைக் கொண்டதாக 29ஆவது ஷரத்து அமைந்தது என்றும் சட்டத்தரணி சிவபாலன் சுட்டிக்காட்டினார்.

மனித நேய அமைப்புக்களின் திருகோணமலை மாவட்ட அலுவலகத்தில் இந்த பயிற்சிப்பட்டறையை திருகோணமலை பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தின் பிரதித்தலைவி திருமதி.ஆர். பாலசிங்கம் ஆரம்பித்து வைத்தார். வன்முறையற்ற தொடர்பாடல் சம்பந்தமாக கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாக பீடாதிபதி ரி. பிரபாகரன் பேசினார். சிக்கலான மனித உரிமைகள் குறித்த தகவல்களை நம்பிக்கையான முறையில் சேகரிப்பதும் அறிக்கையிடுவதும் பற்றிய பட்டறையை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மனித நேய அமைப்புக்களைச் சேர்ந்த எஸ். சசீதரன் வி.கலைச்செல்வன் ஆகியோர் நடத்தினர் யசுஸ்.எயிட் அமைப்பின் நிபுணத்துவ ஆலோசகர் லீபிரிக் பேசும் போது, யுத்தத்திலிருந்து சமாதானத்திற்கான நிலை மாற்றத்தின்போது அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றி விளக்கினார்.

மனித உரிமைகள், நல்லாட்சி பற்றி சட்டத்தரணி சிவபாலன் பேசினார்.

இப்பயிற்சிப்பட்டறையில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனித நேய அமைப்புக்களிலிருந்து 25 பிரதி நிதிகள் பங்குபற்றினார்கள்.கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் இப்பட்டறை நடத்தப்பட்டது.

## கிளி.மாவட்ட கிரிக்கெட் நிர்வாகம் புனரமைப்பு

(அறுவடைச்செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் நிர்வாகப் புனரமைப்பு கிளி. மாவட்ட இளைஞோர் செயற்பாட்டு நிறுவன மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

நிர்வாகத் தலைவர் வைத்திய கலாநிதி பூஷ்பமேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற கிரிக்கெட் சங்கப்புனரமைப்பு வைபவத்தில்,

வைத்திய கலாநிதி பூஷ்பமேஸ்குமார் தலைவராகவும், சி.விக்டர்மான், பாலசேகரதாசன் துணைத்தலைவர்களாகவும், எஸ். அமலன் செயலாளராகவும், எஸ்.சுகந்தன் துணைத்தலைவராகவும், ப.ஆனந்தராசா பொருளாளராகவும் செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேரும் தெரிவுசெய்யப்பெற்றனர். இலங்கை கிரிக்கெட் சபையின் இணைப்பாளராக சு.கனகராசாவும் மாவட்ட இணைப்பாளராக அமிர்தஅப்புதுரையும், போசகராக கிளி. அரச அதிபர் தி.இராசநாயகமும் துணைப்போசகராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் ம.பத்மநாதனும் தெரிவு செய்யப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)



## நியாப் திட்டத்தின் ஊடாக அரைக்கும் ஆலை கையளிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீனக்குடியமர்த்தப்பட்ட கப்பல் துறை கிராமத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்படும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைக்கப்பட்ட விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் (நியாப்) கீழ் ஒரு அரைக்கும் ஆலை கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அதனை விட ஜீவனோபாய திட்டத்தின் கீழ் வியாபார நடவடிக்கைகளுக்காக சைக்கிள்கள், தையல் இயந்திரங்கள் ஆகியன வழங்கப்பட்டன. இந்நிகழ்வை திருமலை பிரதேச செயலர் சுந்தரம் அருமைநாயகம் ஒழுங்கு செய்திருந்தார்.

பிரதம விருந்தினராக நியாப் திட்டத்தின் பிரதி திட்டப் பணிப்பாளர் எஸ். செல்வரத்தினம் பங்குபற்றினார், மீளக் குடியமர்ந்த மக்கள் வாழும் கிராமங்களில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதற் தடவையாக கப்பல் துறையில் தான் அரைக்கும் ஆலை ஒன்றை நியாப் திட்டம் வழங்கியுள்ளது. வருமான உற்பத்தி செயற்திட்டத்தின் கீழ் 6இலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட ஆலையின் நிர்வாகத்தை கப்பல்துறைமாதர் அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது நெல், மிளகாய், மற்றும் தானிய வகைகளை அரைக்கக்கூடியதாக நான்கு அரைக்கும் இயந்திரங்கள் இந்த ஆலையில் பொருத்தப்பட்டுள்ளன.

திருமலை மாவட்டக் கமத்தொழில் சேவை உதவியாணையாளர் ரவிச்சந்திரன், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கன்னியா பகுதி இணைப்பாளர் பொ.கனகநாயகம் ஆகியோரும் பேசினார்கள். பிரதேச செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். திருமலை பிரதேசப் செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ஜலஜியன் திட்டமிடல் அதிகாரி தமிழ்ச்செல்வன் மற்றும் அதிகாரிகளும் பங்குபற்றினார்கள். (25)




# சாதனை வீரர்களின் வரிசையில்......

[illegible]



[illegible]

# வேதனைப்படுகிறார் லாங்கர்



[illegible]

# நீச்சல் ஓர் அறிமுகம்



[illegible]

பிரதீபன்

[illegible]

# இலங்கையின் சுதந்திரத்தின் பின் விளையாட்டு அபிவிருத்தி ஒரு மேல் நோக்கு

[illegible]

(அடுத்தவாரமும் வரும்)

தமிழர் தாயகத்தின் ஒரே ஒரு தேசிய நாளிதழாக
இன்று தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் பாதம் பதிக்கும்
ஈழநாதம் மக்கள் நாளிதழுக்கு
எமது வாழ்த்துக்கள்!


கட்டைவேலி ~ நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
* நுகர்ச்சிச் சேவை
* கிராமிய வங்கிச் சேவை
* ஒப்பந்தப் பகுதிச் சேவை
* வெதுப்பகம்
* நூல் நிலையம்
* கலாச்சார பெருமன்றம்
* புலமைப்பரிசில் வழங்கல்
* பாலர் பாடசாலை
மேலும் பல சேவைகளினூடாக
எமது மக்கள் பயன்பெறும்வகையில்
நாம் செயற்படக்காத்திருக்கின்றோம்
அங்கத்துவர்கள், பணியாளர்கள்
கட்டைவேலி ~ நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
தொ.பே: 021-226 3263
கரவெட்டி
தொ.நகல்: 0602-212540


வடமராட்சியில் சேவைகளின் மத்திய நிலையம்
சதாபொன்ஸ்
ஒப்செற் அச்சுப்பதிப்பு
கணனி அச்சுவேலைகள்
போட்டோ பிரதி
தொலைபேசி/தொலைநகல் சேவை
அல்வாய்
கல்விச் சேவை
வர்த்தக நிலையம்
ஓட்டோ சேவை
இன்னும் பல சேவைகள்

உங்கள் தேவைகள் எதுவாகினும் நாடும் ஒரே இடம்
சதாபொன்ஸ்


நாவலர் புத்தகசாலை
பாடசாலை உபகரணங்கள்,
பத்திரிகைகள் கதைப்புத்தகங்கள்,
அச்சுத்தாள்கள் இன்னும் பல பொருட்களை
பெற்றுக்கொள்ள ஒரே இடம்


நாவலர்
புத்தகசாலை
தென்புலோலி, புலோலி.

தமிழர் தாயகத்தின் ஒரே ஒரு தேசிய நாளிதழாக
இன்று தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் பாதம் பதிக்கும்
ஈழநாதம் மக்கள் நாளிதழுக்கு
எமது வாழ்த்துக்கள்!

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்.
மஹாலக்ஷ்மி தங்கமாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

பலசரக்கு பொருட்களின் விற்பனையாளர்
ஸ்ரீ டாக்கடை
உடுப்பிட்டி

அனைத்து விதமான பலசரக்குப்
பொருட்களையும் பெற்றுக்கொள்ள ஒரேஇடம்
வைரவன் பல்பொருள் வாணிபம்
கிராமக்கோடு, புலோலி.

ஸ்ரீதேவி சைவ உணவகம்
ஏராளமான சைவஉணவுகளை சுவைத்து மகிழ நாடவேண்டிய ஒரே இடம்.
ஸ்ரீதேவி சைவ உணவகம்
சாவகச்சேரி - வீதி
மந்திகை.

தரமான போட்டோ கொப்பி பிரதிகளை
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
கண்ணன் போட்டோ கொப்பி சேவிஸ்
இலங்கை வங்கி - அருகாமை
பருத்தித்துறை.

கவிதா புத்தகசாலை
பாடசாலை உபகரணங்கள்,
பத்திரிகைகள் இன்னும் பல பொருட்கள்
பெற்றுக்கொள்ள ஒரே இடம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

பாடசாலை உபகரணங்கள்,
பத்திரிகைகள்
பெற்றுக்கொள்ள ஒரே இடம்
மொடேர்ன் ஸ்ரோர்ஸ்
பஸ்நிலையம் - நெல்லியடி.

திருமணப்பட்டுப்புடவைகள், சிறுவர் சிறுமியர்களுக்கான
ஆடைவகைகளை பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
செல்லமுத்தூஸ்
புடைவை மாளிகை
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
T-P: 021-2263288

அழகுக்கு அழகூட்டும் புத்தம் புதிய சாறிகள்,
ஆடவர்களுக்கான சேட்டிங், சூட்டிங் வகைகளை
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
நெல்லை சில்க்
பிரதான வீதி, நெல்லியடி.
T-P: 021-2263207

DEALERS IN
Lanka Kerosene,
"CEYPETCO" Agro Chemicals.
விண்மீன் அங்காடி
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
T-P: 021-2263027

# பாபர்மசூதி இடிப்புக்குறித்து அத்வானி விசாரிக்கப்படவேண்டும்

## இணை அமைச்சர் கோரிக்கை

(புதுடில்லி)

**அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பான வழக்கில் முன்னாள் துணைப்பிரதமர் அத்வானி மீது விசாரணை நடத்துமாறு இந்தியாவின் அறிவியல் தொழில் நுட்பத்துறை இணை அமைப்பாளர் கபில்சுபில் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.**

புதுடில்லியில் நேற்று முன்தினம் அளித்தபேட்டியின்போது பாபர் மசூதி இடிப்பு வழக்கில் இருந்து அத்வானியின் பெயர் அரசியல் நோக்கத்திற்காகவே நீக்கப்பட்டது. எனவே இது தொடர்பாக அத்வானி உள்ளிட்டோர் மீது மீண்டும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் இணை அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இராணுவ தளபாடங்கள் வாங்கியதில் ஊழல் மற்றும் பல்வேறு மோசடிகள் போன்ற விவகாரங்களில் ஒளிவுமறைவின்றி விசாரணை தவறிழைத்தவர்கள் நடத்தி தண்டிக்கப்பட வேண்டுமென்றும் கபில் சுபில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## அ.தி.மு.க — பா.ஜ.க. கூட்டணி முடிந்தது

(புதுடில்லி)

அ.தி.மு. கழக உறவை பா.ஜ. கட்சி உதறித்தள்ளியுள்ளது.

தேர்தலுக்காகத்தான் அ.தி.மு. கழகத்துடன் கூட்டணி அமைத்தோம். தேர்தல் முடிந்ததோடு கூட்டணியும் முடிந்துவிட்டதாக பா.ஜ.கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

## காவிரிநீரை தமிழகத்திற்கு விட நடவடிக்கை எடுக்குக

### – பிரதமரிடம் தமிழக விவசாயிகள் கோரிக்கை

(சென்னை)

காவிரி ஆணையத்தினை உடனடியாக கூட்டி கர்நாடகத்தில் இருந்து [illegible] பெற்றுத் தருமாறு இந்தியப்பிரதமரை தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் விவசாயிகள் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் விழுப்புரத்தில் நடைபெற்றுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து காவிரி நீரைப் பெற நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## தமிழக ஆளுநர் இராஜினாமா

(சென்னை)

பா.ஜ.கட்சி ஆட்சியில் தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்ட ராம மோகன்ராவ் நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்துள்ளார்.

மத்தியில் பா.ஜ.கட்சி தோல்வியடைந்து காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்ததையடுத்து இவர் இராஜினாமாச் செய்து புதுடில்லிக்கு அவசரமாக விரைந்துள்ளது. தமிழ் நாட்டின் ஆளுநராக ஜனார்த்தன ரெட்டி, அல்லது ஆந்திர ஆளுநராக இருக்கும் பர்னாலா நியமிக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மின் கட்டணத்தைக் குறைக்க தமிழக அரசு முடிவு

(சென்னை)

வீட்டு உபயோகிப்பாளர்களின் மின் கட்டணத்தை குறைக்க முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் கணிசமான நிவாரணம் கிடைக்கும் வகையில் மின் வாரியத்திற்கு தமிழ நாடு அரசு மானியம் வழங்கிட முடிவு செய்துள்ளது. குறைக்கப்படும் இக் கட்டணம் வரும் 16ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார். மின்சார சட்டத்தின் படி வீட்டு உபயோகிப்பாளர் உட்பட மீள் பகிர்வு மானியம் பெறும் அனைத்து நுகர்வோருக்குரிய மின் கட்டணங்களைப் படிப்படியாக உயர்த்தி அதன் மூலம் உள் பகிர்வு மானியத்தின் அளவைக் குறைக்க வேண்டும் என்றும் வீட்டு உபயோகிப்பாளர்களின் மின் கட்டண வீதத்தைக் குறைக்க அதன் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கணிசமான நிவாரணம் கிடைக்கும் வகையில் தமிழக அரசு மானியம் வழங்கிட முடிவு செய்திருப்பதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இன்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முன்னைய தி.மு.க.அரசில் நிதிமுறை குழறுபடி மற்றும் நிர்வாக நடவடிக்கை காரணமாகவே மின் கட்டணங்களை உயர்த்த வேண்டிய நிலைக்கு தமிழக அரசு தள்ளப்பட்டதாக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் 2001 ஆம் ஆண்டு தமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது தமிழ்நாடு மின் வாரியம் எத்தகைய நிதி நெருக்கடியால் சிக்கியிருந்தது என நினைவு கூர்ந்துள்ளார். 2001ஆம், 2002ஆம் ஆண்டு முன்னைய தி.மு.க அரசு விட்டுச்சென்ற மின் வாரியம் பற்றாக்குறை ஏறத்தாழ 5ஆயிரம் கோடிரூபாய் என்றும் மின்வாரியம் முறிந்து போவதை தடுக்கவும் மின் வெட்டு தரமற்ற சேவை மின் தடங்கல் போன்ற நிலைமையை தடுக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியம் மத்திய மின் நிறுவனங்களுக்கு செலுத்தாமல் நிலுவையில் வைத்திருந்த 1962 கோடிரூபாய் தொகையை திருப்பி செலுத்துகின்ற வகையில் அரசின் கடனாக தமது அரசு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

## - ஸ்ரீபாதக் கல்லூரி மாணவர் மீதான -

# பொலிசாரின் தாக்குதல் குறித்த அறிக்கை நீதி மன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஹற்றன் ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியின் பயிலுநர் ஆசிரியர்கள் மீது பொலிசார் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான அறிக்கை நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பில் ஒருவரை வைத்தியசாலைக்குச் செல்வதற்கு அனுமதிக்கவில்லை. இதனையடுத்து அம்புலன்ஸ் வண்டியில் செல்ல அனுமதிக்கும்மாறு பொலிசார் கோரியுள்ளனர்.

அந்தவேளையில் சிலர் பொலிசார் மீது கற்களை எறிந்து தாக்குதல் மேற்கொண்டனர். இதனையடுத்தே பொலிசார் தடியடிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஹற்றன் வலயத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் டபிள்யு.ஜே.எம். ஆரியரத்ன இந்தத் தகவல்களை தெரிவித்துள்ளார்.

இதேவேளை பயிலுநர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்களை தமிழர் ஆசிரியர் சங்கம் உட்பட்ட சங்கங்கள் பலவும் கண்டித்துள்ளன.

## பீகார்-சாக்தா மக்களவைத் தொகுதியில் நேற்று மறுவாக்குப்பதிவு

(புதுடில்லி)

பீகார் மாநிலம் சார்ந்த மக்களவைத் தொகுதியில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று மறுவாக்குப் பதிவு நடைபெற்றது.

ஒரு வாக்குச் சாவடியில் கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் 4 பேர் காயமடைந்தனர். மற்றொரு வாக்குச்சாவடியில் குண்டு வீச்சுச் சம்பவமும் நடைபெற்றது.

பீகார் மாநிலம் சார்ந்த மக்களவைத் தொகுதியில் ரயில்வே அமைச்சர் லல்லுப்பிரசாத் யாதவும் அவரை அதிர்ந்து பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு.ராஜபிரசாத்மோடியும் போட்டியிடுகின்றனர்.

இது தவிர மேலும் 7 சுயேட்சை வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இங்கு சென்ற மாதம் 26ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற்ற போது பெருமளவு வன்முறை, வாக்குச் சாவடி சூறையாடல் என்பன நடைபெற்றுள்ளதால் அங்கு மறு தேர்தல் நடத்த தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டிருந்தது.

## டெங்கு நோயால் புத்தளத்தில் 18பேர் பாதிப்பு

(கொழும்பு)

புத்தளம் நகரில் டெங்குக் காய்ச்சல் இது வரைக்கும் 18 பேரைப் பிடித்துள்ளதைத் தொடர்ந்து புத்தளம் நகர சபையும், பிரதேச சுகாதாரத் திணைக்களமும் இணைந்து இன்று முழுநகரம் தழுவிய பாரிய டெங்கு நுளம்பு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை பொதுமக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளவுள்ளன.

வயது வேறுபாடின்றி புத்தளம் நகரிலுள்ள சகல வட்டாரங்களையும் சேர்ந்த மக்கள் இந்நோய்க்கு ஆளாகியுள்ளதால் பொதுமக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

மேலும் சில டெங்கு நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயிலிருந்து எவ்வாறு பாதுகாப்புப் பெறுவது என்று பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரம் மூலமும் மற்றும் ஒலி பெருக்கி மூலமும் அறிவுறுத்தியும் கூட பொதுமக்களிடமிருந்து அதற்குப் போதிய வரவேற்புக் கிடைக்கவில்லை என புத்தளப் பிரதேச சுகாதார அலுவலகம் கவலை தெரிவித்துள்ளது.

இந்நிலையிலேயே புத்தளம் நகரசபை தனது ஊழியர்களை வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு அனுப்பி மக்கள் பங்களிப்புடன் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிப்பதற்கான அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

சென்ற வருடம் டெங்கு நோய் காரணமாக புத்தளம் நகரில் மாத்திரம் 8உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் 106பேர் பீடிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியர்கள் வேண்டும்

(மன்னார்)

மன்னார்தோட்டவெளி அ.த.க பாடசாலை அடிப்படை வசதிகள் குறைவான நிலையில் இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலை ஆரம்பப் பாடசாலையாக முதலில் இருந்து பின்னர் இடம் பெயர்ந்த மாணவர்களின் நலன் கருதி 2003ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலையாக தரமுயர்த்தப் பட்டுள்ள நிலையில் 375மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

தற்போது புனிசெப் நிறுவனம் மூன்று மலசல கூடங்களையும் ஒரு கிணற்றினையும் கட்டிக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விஞ்ஞானம், சங்கீதம் ஆகிய பாடங்களைப் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள் இல்லாதமையினால் மாணவர்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (மி)

# இல.இல் முதலிடும் ஐரோ.நாடுகளில் பிரிட்டன் தொடர்ந்து முதலிடம்

(கொழும்பு)

இலங்கையில்முதலீடு செய்யும் ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டன் தொடர்ந்து முதலிடத்தை வகித்து வருகிறதென தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா வர்த்தகமன்றத்தின் நான்காவது வருடாந்த மாநாட்டின் போதுஇந்தத்தகவல் வெளியிடப் பட்டுள்ளது.

இந்த மாநாட்டிற்கு பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் ஸ்ரீவன்.வோன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இலங்கையில் மேற் கொள்ளப் படும் வர்த்தக மற்றும் கைத் தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளின் அடிப்படையில் அதிகரித்த முதலீடுகளை இங்கு மேற் கொள்வது சாத்தியமாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வர்த்தக மன்றத்தின் தலைவரும் கெப்டன் பொது முகாமையாளருமான பீற்றர் சிங்சன் உரையாற்றுகையில், இலங்கையின் பெருமளவு ஏற்றுமதிப் பொருட்களைப் பெறும் நாடாக பிரிட்டன் தொடர்ந்தும் இருந்து வரும் என்று கூறியுள்ளார்.

# ஆலை உரிமையாளர் அரிசிவிலையை குறைக்காவிடின் இறக்குமதி செய்யப்படும்

### -அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எச்சரிக்கை

(கொழும்பு)

அரிசிவிலைகளைக் குறைப்பது தொடர்பாக அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

இது தொடர்பாக நுகர்வோர் நலன் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே விடுவித்துள்ள எச்சரிக்கையில், அதிகரித்துவரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்த அரிசிஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலைகளைக் குறைக்காவிடில் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரிசி, மா ஆகியவற்றின் விலைஅதிகரிப்பு தொடர்பாக அரசிற்கும் உற்பத்தியாளர்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.



## சிந்தனைக்கு

மாவீரர்களே! உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகின்றது; உங்கள் நினைவுகளால் எங்கள் உறுதி வைரம் பெறுகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-06-2004

## கரை சேருவார்களா?

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி.) இடையிலான உடன்படிக்கையை மீறிச் செயற்பட முனைந்தால் கடுமையான தீர்மானத்தை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை எச்சரிக்கும் வகையில் ஜே.வி.பி. சுதந்திரக் கட்சியின் மீது வெறுத்துப் போயுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் கூட்டிணைவை மேற்கொண்ட போது ஜே.வி.பி. சில அரசியல் மதிப்பீடுகளை செய்திருந்தது. இதன் பிரகாரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி. யின் ஆதரவின்றி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. ஆகையினால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்வதன் மூலமும் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாகவும், ஆட்சியில் "கிங்மேக்கர்களாகவும்" இருக்கலாம் என்பதும் அதன் மதிப்பீடாகும்.

இந்த வகையிலேயே சுதந்திரக் கட்சியுடன் உடன்பாட்டிற்கு வரவும் கூட்டாகத் தேர்தலில் போட்டியிடவும் ஜே.வி.பி. இணங்கியது. இதே வேளை கடந்த முறை 15 ஆசனங்களை மட்டும் கொண்டிருந்த ஜே.வி.பி. இம்முறை சுமார் மூன்று மடங்கு ஆசனங்களையும் வென்று பெற முனைந்தது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தலில் வெற்றி பெற்று புதிய அரசாங்கத்தை கைப்பற்றுவதற்கு ஜே.வி.பி.யின் உதவி அத்தியாவசியம் என்பதை உணர்ந்திருந்தது. ஆகையினால் ஜே.வி.பி.யினருடன் ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டும் என்பதில் அக்கட்சி உறுதியானதொரு நிலைப்பாட்டில் இருந்தது.

ஆனால் ஒன்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதும் ஜே.வி.பி.யின் சொற்கேட்டு நடப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தயாராக இல்லை. அதாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை ஜே.வி.பி.யின் உதவி பெறப்படுதல் என்பது சுதந்திரக் கட்சியின் முடிவாகும். ஆகையினால் யாரை யார் பயன்படுத்திக் கொள்வது யார், அதிகம் பயனடைவது என்பது குறித்தே அவர்கள் இருதரப்பினரும் விடுகின்றனர்.

இந்நிலையில் தேர்தல் முடிவுகளில் ஜே.வி.பி.க்கு அனுகூலமானதாக அமைந்தது என்பது மிகையில்லை. ஆனால் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் ஜே.வி.பி.யுடனான உடன்பாட்டின் படி நடந்து கொள்ள சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாக இல்லை. ஆட்சியின் பங்காளர்கள் என்ற ரீதியில் அரசின் நடவடிக்கைகள் குறித்து ஜே.வி.பி.க்கு விளக்கமளிக்கவோ அன்றி ஆலோசனை பெறவோ அது தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. சுதந்திரக் கட்சி தனது முடிவின்படி செயற்படுவதாகவே உள்ளது.

இதேவேளை சுதந்திரக் கட்சியோ அன்றி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கையோ இவ்வாறு அமைந்துள்ளமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. ஏனெனில் கடந்த காலங்களில் கூட இதற்கான சான்றுகள் நிறையவே இருந்தன.

எடுத்துக்காட்டாக 1994இல் சனாதிபதித் தேர்தலின் ஜே.வி.பி. களமிறங்க தயாராக இருந்த போது தாம் பதவிக்கு வந்தால் ஆறு மாத காலத்திற்குள் சனாதிபதி பதவி ஒழிக்கப்படும் எனச் சந்திரிகாவால் வாக்குறுதி அளிக்கப்பட்டது. இதனால் ஜே.வி.பி. போட்டியில் இருந்து விலகியது. இது சந்திரிகாவின் வெற்றிக்கு வாய்ப்பாகியது. ஆனால் சந்திரிகா குமாரதுங்க தேர்தலில் வெற்றி பெற்றதும் வாக்குறுதியை மறந்து போனார். இதேபோன்றே 2001 இல் பொ.ஐ.முன்னணி அரசாங்கத்திற்கு ஆபத்து ஏற்பட்ட போது ஜே.வி.பி. ஆதரவளிக்க முன்வந்தது. பொ.ஐ. முன்னணியுடன் ஒப்பந்தத்தை அரசாங்கம் ஒன்றை அமைக்க முன் வந்த ஜே.வி.பி. அதற்கான நிபந்தனைகளையும் விதித்தது. ஆனால் நிபந்தனைகளுடன் ஆட்சி அதிகாரத்தை பிடித்துக் கொண்ட பொ.ஐ. முன்னணி நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை. எடுத்துக் காட்டாக சுதந்திர ஆணைக்குழுக்களை அமைக்கும் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை நிறைவேற்றியும் ஆணைக் குழுக்களை நியமனம் செய்ய சனாதிபதி சந்திரிகா தயாராக இருக்கவில்லை.

கடந்த கால நிகழ்வுகள் இவ்வாறானதாக இருந்த போதும் கடந்த தேர்தலின் போது மீண்டும் ஓர் உடன்பாட்டிற்கு சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி. வந்தது. இவ் உடன்பாட்டால் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்த பின் அமைச்சரவை எண்ணிக்கையில் இருந்து அமைச்சுக்களுக்கான துறை ஒதுக்கீடு வரையிலும் உடன்பாட்டிற்கு மாறான போக்கையே சுதந்திரக் கட்சி கடைப்பிடித்து வருகிறது.

இந்நிலையானது ஜே.வி.பி.யின் கனவுகளை கலைப்பதாகி விட்டது. ஆட்சியைத் தீர்மானிப்பவர்களாகவும் கிங்மேக்கர்களாகவும் தம்மை கற்பனை செய்த ஜே.வி.பி.யினருக்கு பலத்த ஏமாற்றமாகவே இவை அமைந்தன. இந்நிலையில் தான் சுதந்திரக் கட்சிக்கு எச்சரிக்கை விடுக்கும் நிலைக்கு ஜே.வி.பி. வந்துள்ளது.

ஆனால் சுதந்திரக் கட்சியினரும் சனாதிபதி சந்திரிகாவும் எதற்காவது ஜே.வி.பி.யின் அச்சுறுத்தல் காரணமாக தமது போக்கை மாற்றிக் கொள்வார்கள் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா ஆறு கடக்கும் வரையிலேயே அண்ணனும் தம்பியும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர். ஆகையினால் தற்போதுள்ள கேள்வி சனாதிபதி சந்திரிகா தான் ஆற்றைக் கடந்து விட்டதாக கருதுகின்றாரா? அன்றிக் கடக்க வேண்டிய தூரம் இன்னும் உள்ளதெனக் கருதுகின்றாரா? என்பதைப் பொறுத்தும் படகை கவிழ்த்ததால் தம்மால் கரைசேர முடியும் என்ற நினைப்பை ஜே.வி.பி. எட்டிவிட்டதா"என்பதுமே சுதந்திரக் கட்சியினதும், ஜே.வி.பி.யினதும் கூட்டின் ஆயுட்காலத்தை தீர்மானிக்கத்தக்கதாகும்.

# ஊழல் மோசடிகள் புரிவோரிடம் சொத்து பறிமுதல் செய்யச் சட்டம்

### – விரைவில் கொண்டுவர சரத் அமுனுகம நடவடிக்கை

(கொழும்பு)

ஊழல் மோசடிகளுக்கு எதிராக சட்டமொன்றைக் கொண்டு வரவுள்ளதாக சிறிலங்காவின் நீதி யமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். இச்சட்டத்தின் மூலம் அரச உடமைகளை முறையற்ற வகையில் பாவித்து சொத்துச் சேர்த்தவர்களிடமிருந்து அவற்றைப் பறிமுதல் செய்யக்கூடியதாக இருக்கும் என அவர் மேலும் கூறினார்.

இந்தப் புதிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் கூறிய சரத் அமுனுகம ஊழல் புரிவோர் அரசியல் வாதியாகவோ, அரச ஊழியர்களாகவோ இருந்தாலும் அவர்களின் தராதரங்களை பாராது தண்டனை வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதன்மூலம் கோதுமைமாவை 22 ரூபாவுக்கு விற்க முடியாது

### -முன்னாள் பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்வதன் மூலம் தற்போதுள்ள ஒரு கிலோ 22 ரூபா என்ற விலையை நடைமுறைப்படுத்த முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் பிரதி நிதியமைச்சராக இருந்த பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இந்தியாவிலிருந்து கோதுமைமாவை இறக்குமதி செய்தால் அதனை ஒரு கிலோ 27 ரூபா என்ற அடிப்படையிலேயே விற்பனை செய்யக்கூடிய நிலை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே உரிய நிபந்தனைகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் கோதுமைமா விநியோகம் இடம் பெற்றபோதும் பொது சன ஐக்கிய முன்னணி ஆட்சியிலேயே அந்த விநியோக அதிகாரம் பிறிமா நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது இந்த நிலையில் கோதுமைமா விலையேற்றத்துக்கு முழுமையாக ஐக்கிய தேசியக் கட்சியை குற்றம் சுமத்த அரசாங்கம் முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டார். (32)

# சிறிலங்காவில் பொலிஸ் நிலையங்களை நூறால் அதிகரிக்க அரசு நடவடிக்கை

சிறிலங்காவில் பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையை மேலும் நூறால் அதிகரிக்கவும் ஆயிரம் பேரைப் புதிதாகச் சேவையில் இணைத்துக் கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக சிறிலங்காப் பாதுகாப்பு மற்றும் சட்டத்துறை அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் யாவும் 2001ஆம் ஆண்டு சனாதிபதியின் பொலிஸ் நிலையங்களை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

தற்போது சிறிலங்காவின் 400 பொலிஸ் நிலையங்கள் காணப்படுவதாகவும் சனத்தொகை பெருக்கத்துக்கேற்றவாறு சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க பொலிஸ் நிலையங்கள் புனரமைப்புச் செய்ய வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது அத்துடன் பொலிஸ் திணைக்களத்துக்கு மேலும் எண்ணாயிரம் பொலிசாரை புதிதாக நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாக ரணவிராஜா தெரிவிக்கிறார்.

# வடமேல் மாகாண சபை உறுப்பினர் சாந்த அபேரட்ணவை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையின் உறுப்பினரான சாந்த அபேரட்ணவை கைது செய்யுமாறு சிலாபம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவர் பாதாள உலகக் குழுவுடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து ரி-56 ரக துப்பாக்கி உட்பட பல ஆயுதங்களைப் பெற்று வைத்திருந்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது இதனையடுத்து குறிப்பிட்ட மாகாண சபை உறுப்பினர் காணாமல் போயுள்ளார்.

இதேவேளை இரத்தினபுரி பகுதியில் சிறையில் தப்ப முயன்ற ஒரு கைதி காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன் அத்துருகிரிய பகுதியில் பாதாள உலகக் குழுத்தலைவர் ஒருவர் கொள்ளையிடப்பட்ட பொருட்களுடன் தப்பி செல்கையில் சுட்டுக் கொல்லப்பட்டார். (32)

# வாக்குச்சீட்டு அச்சிடும் பணி வியாழக் கிழமை ஆரம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பமாக உள்ளன. அரசாங்க அச்சகம் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

மத்திய ஊவா, சப்பிரமுவ,மேல்,வடமத்திய மற்றும் தென்மாகாண சபைகளுக்கே இதத்தேர்தல் நடைபெற உள்ளன. இந்த தேர்தலில் வாக்களிக்க 95 இலட்சத்து 82ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர்.

# புத்தபகவானின் போதனை அடிப்படையில் சமாதானத்தை உருவாக்கத் திட்டம்

### -சிறிலங்காப்பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ

(கொழும்பு)

சமாதான சமூகம் ஒன்றை புத்தபகவானின் போதனைகளின் அடிப்படையில் உருவாக்குவதற்கான பல செயற்திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதாக சிறிலங்காவின் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.


அவர் இது பற்றி மேலும் கூறியதாவது

நாட்டில் உள்ள அனைத்து பிரிவினர்களுக்கும் இணையத்தள வசதிகளை கொண்ட கணனிகள் வழங்கப்படவுள்ளதாகவும் இவை உலகோடு அவர்களை இணைக்கும் பாலமாக அமையும் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட பிரதமர் அங்கு உரையாற்றுகையில்

வழிபாட்டுத் தலங்கள் வழிபாட்டை மேற்கொள்ளும் அதே வேளை சமூகத்தின் மையமாகவும் செயற்பட வேண்டும் என்று தெரிவித்ததுடன் சமூக சேவைகளின் மீது வழிபாட்டுத் தலங்களின் கவனம் மேலும் அதிகமாகத் திரும்ப வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுள்ளார்.

இதன் மூலமே பௌத்தர்கள் ஏனைய மத நம்பிக்கைகளின் பக்கம் திரும்பாமல் இருக்கச் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

பூமியின் உயிர்த்திணிவில் 90 சதவீதத்திலும் அதிகமான அளவு சமுத்திரங்களிலேயே உயிர் வாழுகின்றன !.

